# சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை

**OS.NO.253/2014** **தேதி.24.01.2025**

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. மகாலட்சுமி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. பி.வா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024ம் ஆண்டு 24.01.2025ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | விநாயகம் |
| த/பெ. | : | சண்முகம் |
| வயது | : | 69/2025 |
| தொழில் | : | விவசாயம் |
| இனம் | : | ஆண் |
| கிராமம் | : | பூண்டி |
| வட்டம் | : | வாலாஜா |
| மாவட்டம் | : | இராணிபேட்டை |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

என் சகோதர் என் மீது பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பேரா 8ல் தாவா சொத்துக்களில் 1 முதல் 17 இலக்க சொத்துக்களில் வாதிக்கும் எனக்கும் பாதி பாகம் உள்ளது என கூறியுள்ளேன் என்று கூறினால் சரிதான். பூர்வீக சொத்தில் என் அண்ணனுக்கு பாதி பாகம் உள்ளது. தாவா சொத்துக்களில் 25 முதல் 29 இலக்க சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்றால் என் தாயார் லட்சுமி அம்மாள் பெயரில் உள்ளது. அந்த

சொத்துக்களை கோதண்டபாணி என்பவரிடமிருந்து 16.02.2002ல் கிரையம் என் தாயார் பெயரில் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த சொத்துக்களில் என் தாயார் பெயரில் எழுதி வாங்கினேன். அந்த சொத்துக்களில் என் அம்மா பெயரில் வாங்குவதற்கு எனக்கு வருமானம் உள்ளதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை ஆனால் நான் லோன் போட்டு அந்த சொத்தை வாங்கினேன். சாட்சி தற்போது வீட்டை அடமானம் வைத்து வாங்கியதாக கூறினார். தாவா 25 முதல் 29 இலக்க சொத்துக்கள் குறித்து ஆவணம் வா.சா.ஆ.8 என்றால் சரிதான். தாவா 30 இலக்க சொத்து காலி மனையா என்றால் 3 கெஜ அகலம், 70 அடி நீளம் கொண்டது அதில் ஓட்டு வீடும், காலி மனையும் உள்ளது. அந்த ஓட்டு வீட்டில் தற்போது நான்தான் குடியிருந்து வருகிறேன். அந்த ஓட்டு வீட்டின் பத்திரமும் என் அம்மா பெயரில்தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த ஓட்டு வீட்டை நான்தான் என் அம்மா பெயரில் வாங்கி எழுதினேன். என் அம்மா பெயரில் வாங்கி எழுதியதற்கு வருமானம் எந்த வகையில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் கருவாடு, மீன் விற்று அந்த சொத்தை வாங்கி என் அம்மா பெயரில் வாங்கினேன். நான் வழக்கிற்காக என் வருமானம் முலம் என் அம்மா பெயரில் சொத்து வாங்ஙகியதாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். என் வாதியான அண்ணன் வருமானத்தில்தான் என் அம்மா பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது. அந்த சொத்து வாங்கும்போது வாதி 5ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார். வாதி 5ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது நான் 4ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். நான் முதலில் வேலைக்கு சென்றேனா, என் அண்ணன் முதலில் வேலைக்கு சென்றாரா என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. தாவா

31 மற்றும் 32 இலக்க சொத்துக்கள் வா.த.சா.ஆ.10 என் அம்மா பெயரில் உள்ளது என்று சொன்னால் என் தாயார் பெயரில் உள்ளது. தாவா சொத்தான 25 முதல் 36 இலக்க சொத்துக்களை வாதி தமிழ்நாடு போக்குவரத்து துறையில் நடத்துனராக பணிபுரிந்து அதில் வந்த வருமானத்தை கொண்டு என் தாயார் பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா 37 மற்றும் 38 இலக்க சொத்துக்களை வாதிதான் அவரது தாயார் பெயரில் எழுதி வாங்கினார் என்றால் சரியல்ல. நான் வாதியை ஏமாற்றி தாவா 37 மற்றும் 38 இலக்க சொத்துக்களை என் பெயரில் எழுதிக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா 37 மற்றும் 38 இலக்க சொத்துக்களை நான் வாங்கும்போது நான் எந்த வேலையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர் ஊரில் வசித்து வரவில்லை. தாவா 1 முதல் 38 வரையிலான சொத்துக்களை இன்றைய தேதிவரை நான்தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். வாதி என்னிடம் பாக்தை பிரிக்க சொல்ல சொல்லி என்னிடம் கேட்டார். நான் என்னுடைய சொத்தை கொடுக்கமாட்டேன். பூர்வீக கொத்தில் கொடுக்கிறேன் என்றால் சரிதான். பாகம் கேட்கும்போது கைகலப்பு எதுவும் ஏற்படவில்லை. வாதி என்னிடம் 02.12.2008 ல் பாகம் கேட்ட வந்தபோது அவரை கொலை செய்துவிடுவதாக மிரட்டினேன் என்றும் அது சம்பந்தமாக வாதி வாலாஜா காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த புகாரின் அடிப்படையில் புகார் ஏற்புச் சான்றிதழ் 373/2008 வாதிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் வாதியை காவல் நிலையத்தில் திட்டி அனுப்பினார்கள். 2017 ல் மீண்டும் வாதி என்னிடம் சொத்தை பிரித்து தரும்படி கோரினார்கள் என்றால் சரியல்ல. நாட்டாண்மைதாரர்கள் முன்னிலையில் கேட்டார். வாதி என்னிடம் 22.12.2017 ல் சொத்தை பிரித்து தரும்படி கேட்டார் என்றால்

சரிதான். 22.12.2017 ல் வாதிக்கும் எனக்கும் சொத்து சம்பந்தமாக கைகலப்பு ஏற்பட்டு வாலாஜா காவல் நிலையத்தில் வாதி புகார் அளித்தார் என்றும் அந்த புகார் ஏற்புச் சான்றிதழ் 455/2017 கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. ஆனால் போலிசார் வாதியை திட்டி அனுப்பினார்.

(கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை:- ஒத்திவைக்கப்படுகிறது).